பள்ளிக் கட்டிடத்திற்கென, மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ரூ. 22,500 செலுத்தப்பட்டிருந்தும், இதுவரை அக்கட்டிடம் கட்டப்படவில்லை என்பதனை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அக்கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். (அ), (இ) மற்றும் (உ): இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கென பெறப்பட்ட மக்களின் பங்குத் தொகை ரூ. 12,500 ஆகும். மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பெறப்பட்ட தொகையான ரூ. 10,000 இப்பள்ளி ஆரம்பிப்பதற்கென்று கொடுக்கப்பட்ட தொகையாகும். இவ்வூராட்சி ஒன்றியக் கட்டடத்தையும் இவ்வூராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான 2.40 ஏக்கர் நிலத்தையும் இப்பள்ளிக்கென பெறுவது குறித்து நாகை மாவட்டப் பதிவாளர் மற்றும் பதிவுத்துறைத் தலைமை ஆய்வாளர் ஆகியோருக்கிடையே கடிதப்போக்கு வரத்து நடந்துவருகிறது. இம்மாற்றம் செய்யப்பட்ட பின்பே இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவது குறித்து பரிசீலனை செய்ய இயலும்.

மதுரையில் தமிழ்ச் சங்கம்

***77 வினா.—திரு. ஆ. நல்லசிவன் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்று அமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்

(இ) இச்சங்கத்தின் அமைப்பு, செயல்முறை, நடைமுறை வழிகள் ஆகியவற்றை வகுத்துத் தர ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தன் அறிக்கையை விரைவில் அரசுக்கு அளிக்கும், இச்சங்கத்தின் கட்டிடங்கள் கட்ட மதுரையில் வேண்டிய நிலத்தை ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

திரு. ஆ. நல்லசிவன்: தமிழ்ச் சங்கம் அமைப்பதனுடைய நோக்கம் பற்றியும், உறுப்பினர்களாக வருவதற்கு என்ன தகுதி இருக்க வேண்டும் என்பது பற்றியும், அதை அரசு என்ன நோக்கத்தோடு ஆரம்பித்திருக்கிறது என்பது பற்றியும் அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 9]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருக்கிற தமிழர்களுடைய கலை, கலாச்சார தொடர்புடைய சங்கமாகக் கருதப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அதற்கென குழு அமைக்கப்பட்டிருக் கிறது. அக்குழுவின் பரிந்துரையை வைத்து மேற்கொண்டு இதற்கென விரிவான ஒரு செயல்முறையை வைத்து இந்த சங்கத்தைத் துவக்க இருக்கி றோம். தமிழ் அறிஞர் திரு. விசுவநாதன் அவர்கள் அதில் உறுப்பினராக இருக்கிறார்கள். தமிழ் அறிஞர் திரு. தேவநேயப்பாவாணர் அவர்களும் அதில் உறுப்பினராக இருந்தார்கள். அவர்கள் மறைந்துவிட்டார்கள். தமிழ் அறிஞர் திரு. வேணுகோபால் பிள்ளை அவர்களும் உறுப்பினராக இருக்கி றார்கள். ஆனால் இவருடைய உடல்நிலையும் சரியில்லாத காரணத்தால் இருவருக்கும் பதிலாக வேறு இரண்டு பேரைப் போடுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

ஆசிரியர்-மாணவர் விகிதம்.

***78 வினா.—திரு. ஆ. நல்லசிவன் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு** கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளி, மேல் நிலைப் பள்ளிகளில் ஆறாம் வகுப்புகளில் 80 மாணவர்களுக்கு மேல், ஒரு ஆசிரியருக்கு வருகை உள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், கல்வித் தரம் உயர்வாக்கப்பட, ஆசிரியர்-மாணவர் விகிதப்படி, கூடுதலாக ஆசிரியர்கள் நியமனம் செய்யும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம். 26 அரசினர் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் அங்ஙனம் உள்ளது.

(இ) மற்றும் **(உ)** ஆம். இந்நிலை போக்கி ஆசிரியர்-மாணவர் விகிதாசார அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்ய நிதி நிலையை அனுசரித்து ஒவ்வொரு வருடமும் 1,000 புதிய இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் மாநில முழுவதிலுமுள்ள பள்ளிகளுக்கு உருவாக்கப் படுகின்றன. இப்பணியிடங்களிலிருந்து தர்மபுரி மாவட்டத்திற்கு ஒவ்வொரு வருடமும் புதிய ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன.